1974 மார்ச் 28]

Temples Surplus Funds

*240 Q.—THIRU S. S. THENNARASU (on behalf of Thavathiru Kundrakkudi Adigalar) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the funds diverted from the Temples, Surplus Funds for public utility during the financial year 1972–73; and

(b) the names of the temples from which such diversion of funds has been made?

திருக்கோயில்களின் உபரி நிதி

திரு. எஸ். எஸ். தென்னரசு (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-73 நிதியாண்டில் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, பொதுப்பணிக்கு மாற்றுதல் (Diversion) செய்யப் பட்ட நிதி எவ்வளவு?

(இ) எந்தெந்த திருக்கோயில்களின் நிதியிலிருந்து மேற்படி மாறுதல் செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 1972-73 நிதியாண்டில் பொதுப் பணிக்காக ரூ. 28,61,168 திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து மாற்றுதல் செய்யப்பட்டுள்ளது.

(இ) மேற்படி தொகை பல அறநிலையங்களால் கொடுக்கப்பட்டது. ஆனால் குறிப்பாக பழனி, அருள் திரு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மதுரை, அருள்திரு மீனாட்சி அம்மன் திருக்கோயில், இராமேஸ்வரம், அருள் திரு இராமநாதசுவாமி திருக்கோயில், சிவகங்கை சமஸ்தான திருக்கோயில்கள், திருவெண்காடு, அருள்திரு வெண்காட்டீஸ்வரர் (ஸ்வேதாரண்யேசுவரர்) திருக்கோயில், திருச்செந்தூர், அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மணவாள நல்லூர் அருள்திரு கொளஞ்சியப்பர் திருக்கோயில், திருத்தணி, அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மயிலாப்பூர், அருள்திரு கபாலீஸ்வரர் திருக்கோயில், வடபழனி, அருள்திரு வடபழனியாண்டவர் திருக்கோயில் முதலியவற்றிலிருந்து கணிசமான தொகை மாற்றப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்.]